## DEPOSITION OF WITNESS

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 247/2019 |
| Name | : | Karthikeyan |
| P.W. | : | 1 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.07.2025

**1 முதல் 3 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் செங்கழனிபுதூரில் வசித்து வருகிறேன். டு வீலர் ஒர்க் ஷாப் வைத்துள்ளேன். நான் 2019 ம் ஆண்டு TVS SUZUKI நீல நிற TN 33 Q 5735 என்ற இருசக்கர வாகனத்தை தெரிந்த நபரிடம் இருந்து விலைக்கு வாங்கி ஓட்டி வந்தேன். உரிமையாளர் பெயரை மாற்றம் செய்யாமல் இருந்தேன். ஒரு வாரம் கழித்து 28.05.2019 ம் தேதி இரவு 07.00 மணிக்கு கொமரலிங்கம் ரோட்டில் ரயில்வே கேட்டிற்கு தெற்கு பக்கம் வண்டியை நிறுத்தியிருந்தேன் மேற்கு புறம் இருந்த நண்பர் மதன்சதீஷ் என்பவரிடம் பேசிக்கொண்டிருந்தேன் எனது வண்டி சத்தம் கேட்டு திரும்பி பார்த்தேன். ஒரு நபர் எனது வண்டியை ஸ்டார்ட் செய்து நால் ரோட்டை நோக்கி சென்றார் அவரை நான் துரத்திச் சென்ற போது மற்றொரு நபர் அவர் பின்னால் ஏறி அமர்ந்து இருவரும் எனது வண்டியை எடுத்துச் சென்றுவிட்டார்கள். வண்டியை எடுத்த நபரை நான் பார்க்கவில்லை. நால் ரோடு வரை தேடிப் பார்த்து எந்த திசையில் சென்றார்கள் என்று தெரியவில்லை. எனது

நண்பர்களுடன் பல இடங்களில் தேடிப் பார்த்தேன். எனது வண்டியின் மதிப்பு சுமார் ரூ.25 ஆயிரம். இது சம்மந்தமாக போலீசில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் நீதிமன்றத்தில் இன்று ஆஜர்படுத்தப்பட்டுள்ள இருசக்கர வாகனம் தான் என்னுடையது ஆகும். **இருசக்கர வாகனம் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சில நாட்கள் கழித்து வாகனம் கிடைத்துவிட்டதாக சொன்னார்கள். உடுமலைப்பேட்டையில் வாகனம் கிடைத்ததாக தெரிய வந்தது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/−Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்